**செய்தி வெளியீடு எண்: 399** **நாள்: 05.07.2019**

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (5.7.2019) சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்ட வளாகத்தில் உள்ள தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர் சிகிச்சை சிறப்பு மருத்துவமனை கூட்ட அரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியத்தின் மூலமாக புதிதாக தெரிவு செய்யப்பட்டுள்ள 584 மருத்துவ அலுவலர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக, 15 மருத்துவ அலுவலர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்கள்.

அரசு மருத்துவமனைகளில் ஏற்படும் காலிப் பணியிடங்கள் மற்றும் புதியதாக தோற்றுவிக்கப்படும் பணியிடங்களை உடனுக்குடன் நிரப்பி, அரசு மருத்துவ நிலையங்களுக்கு வரும் ஏழை எளிய மக்களுக்கு தங்கு தடையின்றி மருத்துவ சேவை வழங்கப்பட வேண்டும் என்ற நோக்கத்திற்காக, இந்தியாவிலேயே முதன்முறையாக தமிழ்நாட்டில் சுகாதாரத் துறைக்கென தனியாக மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் ஜனவரி 2012–ல் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் துவக்கப்பட்டது. இவ்வாரியம் இதுவரை, 12,815 மருத்துவர்கள், 9,533 செவிலியர்கள் உட்பட 26,777 பணியாளர்களை தெரிவு செய்துள்ளது.

அந்த வகையில், மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியத்தால் தெரிவு செய்யப்பட்ட 1884 மருத்துவ அலுவலர்களில், 1300 மருத்துவ அலுவலர்களுக்கு 4.3.2019 அன்று சென்னை, எழும்பூர், மகளிர் மகப்பேறு நோயியல் நிலையம் மற்றும் அரசு மகளிர் மற்றும் சிறார் நல மருத்துவமனையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பணிநியமன ஆணைகளை வழங்கினார்கள்.

அதன் தொடர்ச்சியாக, சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்ட வளாகத்தில் உள்ள தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர் சிகிச்சை சிறப்பு மருத்துவமனையில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில், 584 மருத்துவ அலுவலர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 15 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கி துவக்கி வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் ஆற்றிய உரை:

‘‘இன்றைக்கு இந்தியாவிலேயே மருத்துவத் துறையில் சிறந்து விளங்கும் மாநிலம் தமிழ்நாடு. உறுப்பு மாற்று அறுவை சிகிச்சையில் நாம் தொடர்ந்து மூன்றாண்டு காலமாக முதலிடம் வகிக்கிறோம். பச்சிளம் குழந்தைகளின் இறப்பு விகிதத்தை குறைத்திருக்கிறோம். பிரசவ காலத்தில் தாய்மார்களின் இறப்பு விகிதம் குறைக்கப்பட்டிருக்கின்றது. இதெல்லாம் நம் மருத்துவர்கள் செய்த சாதனை என்பதை இந்த நேரத்தில் பெருமையோடு சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் இருக்கின்றபொழுது, பல்வேறு திட்டங்களை நாட்டு மக்களுக்கு வழங்கினார்கள். அம்மா குழந்தை நல பரிசு பெட்டகம் மூலம் 14 வகையான பொருட்கள் கொடுத்து, பிறக்கின்ற குழந்தைகள் சுகாதாரமாக இருக்கவேண்டும் என்பதற்காக தாய் உள்ளத்தோடு இந்தத் திட்டத்தை செயல்படுத்தினார்கள். இந்த திட்டத்தின் மூலமாக 17 லட்சத்து 98 ஆயிரம் தாய்மார்கள் பயன்பெற்றிருக்கின்றார்கள். அதேபோல, மகப்பேறு காலத்தில் மகளிரின் ஆரோக்கியத்திற்காக 11 வகையான சித்த மருத்துவ மூலிகை அடங்கிய அம்மா மகப்பேறு சஞ்சீவி திட்டம் என்ற திட்டத்தையும் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் கொடுத்தார்கள். ஒரு குழந்தை நன்றாக வளரவேண்டும் என்பதற்காக கரு உருவாவதிலிருந்து, குழந்தை பிறக்கின்ற வரை நிறைய திட்டங்களை கொடுத்து, ஒரு தாய் ஆரோக்கியமான குழந்தையை பெற்றெடுக்க வேண்டுமென்று அம்மா அளித்த திட்டம்.

அதுமட்டுமல்ல, இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா இருக்கின்றபொழுது கர்ப்பிணி தாய்மார்களுக்கு வழங்கப்பட்ட நிதி ரூ.6,000/—லிருந்து ரூ.12,000/—ஆகவும், ரூ.12,000/—லிருந்து 18,000/—ரூபாயாக உயர்த்தினார்கள். இந்தத் திட்டத்தில் 56 லட்சத்து 28 ஆயிரம் கர்ப்பிணி தாய்மார்களுக்கு 5300 கோடி ரூபாய் நிதியுதவி வழங்கப்பட்டது என்ற தகவலை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்படி அரசு பல்வேறு வகையிலே ஏழை, எளிய கர்ப்பிணி தாய்மார்களுக்கு உதவித் திட்டத்தை வழங்கிய காரணத்தினால், இன்றைக்கு தமிழகத்தில் ஏழைத் தாய்மார்கள் பெற்றெடுக்கின்ற குழந்தைகளும் நலமாக வாழ்கின்ற காட்சியைக் காண்கின்றோம். அதேபோல, முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலமாக 36 லட்சத்து 60 ஆயிரம் பயனாளிகள் 6046 கோடி ரூபாய் அளவில் உயரிய சிகிச்சை பெற்றுள்ளனர். அதுமட்டுமல்லாமல், இன்றைக்கு மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் ரூபாய் 2 லட்சத்திலிருந்து ரூபாய் 5 லட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். அரசு பல்வேறு திட்டங்களை வழங்கி இருக்கின்றது. அம்மா ஆரோக்கிய திட்டம், அம்மா முழு உடல் பரிசோதனை திட்டம் மற்றும் மகளிருக்கான அம்மா மகளிர் சிறப்பு முழு உடல் பரிசோதனை திட்டம், விலையில்லா சானிடரி நாப்கின் வழங்கும் திட்டம், நடமாடும் மருத்துவமனை திட்டம், தொற்றுநோய் தடுப்பு கட்டுப்படுத்தல் மற்றும் சிகிச்சை அளிக்கும் திட்டம், தாய்ப்பால் வங்கித் திட்டம், விபத்து சேவை மையம் முதலிய உயர் சிறப்பு மருத்துவமனை நிறுவுதல், 104 தகவல் ஆலோசனை மற்றும் புகார் உதவி, போன்ற பல்வேறு சிறப்பு திட்டங்களை மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மாவினுடைய ஆட்சியில் தொடங்கப்பட்டு, இன்றைக்கு தொடர்ந்து சிறப்பான முறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு அரசு மருத்துவமனை சுத்தமாகவும், சுகாதாரமாகவும் வைத்திருப்பதும், மருத்துவர்களும் ஏனைய சுகாதார பணியாளர்களும் சிகிச்சை பெற வரும் பொதுமக்களுக்கு தன்னலமற்ற சேவையை உறுதிபடுத்துவதும் நமது பொதுவான நோக்கம் என்றார் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள். எனவே, இன்று பணி நியமன ஆணை பெற்ற மருத்துவர்கள் சேவை மனப்பான்மையோடு மருத்துவப் பணியில் ஈடுபட வேண்டும் என்று உங்களையெல்லாம் அன்போடு கேட்டுக் கொண்டு, இங்கு பணியாணை பெற்றுள்ள உங்கள் அனைவருக்கும் எனது இதயபூர்வமான வாழ்த்துக்களை தெரிவித்து, இந்நிகழ்ச்சியை சிறப்பாக நடத்திய அனைத்து நல்ல உள்ளங்களுக்கும் நன்றி தெரிவித்து விடைபெறுகின்றேன்.''

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.ஓ. பன்னீர்செல்வம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்டர் சி. விஜயபாஸ்கர், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், தலைமைச் செயலாளர் திரு.க. சண்முகம், இ.ஆ.ப., மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை செயலாளர் டாக்டர் (திருமதி) பீலா ராஜேஷ், இ.ஆ.ப., தேசிய நலவாழ்வு குழும திட்ட இயக்குநர் டாக்டர் தாரேஸ் அகமது, இ.ஆ.ப., மருத்துவப் பணியாளர் தேர்வு வாரிய தலைவர் திரு. கிரண் குராலா, இ.ஆ.ப., பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து இயக்குநர் டாக்டர் கே. குழந்தைசாமி, மருத்துவக் கல்வி இயக்குநர் டாக்டர் எட்வின் ஜோ, மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர் (பொறுப்பு) டாக்டர் டி.எஸ். ஸ்வாதி ரத்னாவதி மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9
நாள்: 5.7.2019